**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2016–2017ஆம் நிதியாண்டு – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை) அவர்களின் அறிவிப்பு – அரசு சிறப்புப் பள்ளிகளுக்கான சுற்றுலா திட்டம் – ரூ.12,00,000/– – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 12**

**நாள்: 21.04.2017**
**ஹேவிளம்பி – சித்திரை, 8**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை) அவர்களின் அறிவிப்பு, நாள் 10.08.2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க. எண் 4099/சி.ப.3/2016, நாள் 22.08.2016.
3. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை கடித எண் 3239/வி.பி.உ.1/2016, நாள் 08.10.2016.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அறிவிப்பில், 2016–2017ஆம் நிதியாண்டு மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது:–

> **“தமிழ்நாட்டில் 23 அரசு சிறப்பு பள்ளிகளில் 1500 மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். நீண்ட காலமாக அம்மாணவர்கள் தங்களை சுற்றுலா அழைத்துச் செல்ல வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனர். அம்மாணவர்களுக்கு சுற்றுலா ஏற்பாடு செய்வதின் மூலம் கற்றல் திறனையும் தன்னம்பிக்கையும் அதிகரித்திட இயலும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு சிறப்பு சுற்றுலா திட்டம் ரூ.12,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக, தற்போது அரசு சிறப்புப் பள்ளிகளில் 2016–2017ம் கல்வியாண்டில் கீழ்க்கண்ட விபரப்படி பயிலும் 300 நபர்களுக்கு (மாணவர்கள் மற்றும் உடன் செல்லும் ஆசிரியர்), ஒருவருக்கு ரூ.4000/– வீதம் 300 நபர்களுக்கு இச்சிறப்பு சுற்றுலா திட்டத்தினை (3 நாட்களுக்கான சிறப்புச் சுற்றுலா) செயல்படுத்திடும் வகையில் ரூ.12,00,000/– (ரூபாய்

[த.பி.பா.]

பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:-

| **வ. எண்.** | **பள்ளியின் பெயர்** | **மாணவ, மாணவிகள் / உடன் செல்லும் ஆசிரியர்கள் எண்ணிக்கை** | **தேவைப்படும் தொகை (ஒருவருக்கு ரூ.4000/– வீதம்)** |
|---|---|---|---|
| 01. | பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் | 180 | ரூ.7,20,000/– |
| 02. | செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் | 120 | ரூ. 4,80,000/– |
| **மொத்தம்** | | **300** | **ரூ. 12,00,000/–** |

**3.** மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அவர்கள் மேற்படி சுற்றுலா தொடர்பாக பரிசீலனை செய்து சராசரி கட்டணம் ரூ.4,000/– என்ற அடிப்படையில் 300 மாணவ / மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களை சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான செலவினத் தொகை ரூ.12,00,000/– எனத் தெரிவித்துள்ளார்.

**4.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு சிறப்புப் பள்ளிகளில் 2016–2017ம் கல்வியாண்டில் பயிலும் 300 நபர்களுக்கு (மாணவர்கள் மற்றும் உடன் செல்லும் ஆசிரியர்கள்), ஒருவருக்கு ரூ.4000/– வீதம் 300 நபர்களுக்கு சிறப்புச் சுற்றுலா திட்டத்தினை (3 நாட்கள் சிறப்புச் சுற்றுலா) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்திட ரூ.12,00,000/–ஐ (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| **கணக்குத் தலைப்பு விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|
| "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AA – பார்வையற்றோர் பள்ளி – 54– திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு".<br>(கு.தொ.கு. 2235–02–101–AA–5404). | ரூ.7,20,000/– |
| "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AR – காது கேளாதோர் பள்ளிகள் – 54– திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு".<br>(கு.தொ.கு. 2235–02–101–AR–5400). | ரூ.4,80,000/– |
| **மொத்தம்** | **ரூ.12,00,000/–** |

**6.** மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" குறித்த செலவினமாக கருதப்படமாட்டாது எனினும், 2017–2018ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவை பார்வைக்கு கொண்டு செல்லப்படும்.

இச்செலவிற்கான நிதி 2017–2018ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும் அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்பட்டு, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கம் செய்திட கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித் (சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்18577/நிதி(சந)/2017, நாள் 13.04.2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது. மேலும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 225 (இருநூற்று இருபத்தைந்து)–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

அரசு இணைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர் (மு.கூ.பொ.) சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(அரசு இணைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர் (மு.கூ.பொ.) வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சந(ம)சதி) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர்,சென்னை–9.
நிதித்(சந) (வ.செ.பொ.I/II) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு2–2) துறை, சென்னை–9
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்